அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, கெலமங்கலம்,

கிருஷ்ணகிரி–635113

முதல்வருக்கு பணிந்தனுப்பப்படுகிறது,

பொருள்: அண்ணா, பெரியார் பிறந்த நாளையொட்டி கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டியில் மாணவர்கள் கலந்து கொள்ள அனுமதி வேண்டுதல் சார்பு.

-------

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் அண்ணா, பெரியார் பிறந்த நாளையொட்டி கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி அக்டோபர் 7,8 ஆகிய தேதிகளில் கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலை கல்லூரியில் நடைபெற உள்ளது. பேச்சுப்போட்டிக்கான தலைப்புகள் பிண்ணினைக்கப்பட்டுள்ளது. பேச்சுப்போட்டியில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு முதல், இரண்டாம், மூன்றாம் பரிசுகள் முறையே ரூ.5000, ரூ.3000, ரூ.2000 மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ் மன்றம் மூலம் இப்போட்டியில் கலந்து கொள்ள மாணவர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பவும் மற்றும் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி வழங்குமாறும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு

(வே.சிவன்)

தமிழ் மன்றம் பொறுப்பாசிரியர்

இடம்;கெலமங்கலம்

நாள்; 03.10.2025

இணைப்பு;

1. அண்ணா, பெரியார் பிறந்த நாளையொட்டி கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டியின் தலைப்புகள்.
2. நாளிதழில் வெளிவந்த அறிவிப்பு நகல்.

**இணைப்பு;**

**அண்ணா, பெரியார் பிறந்த நாளையொட்டி கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டியின் தலைப்புகள்.**

**அண்ணா பிறந்த நாள் விழா பேச்சுப்போட்டிக்கான தலைப்பு.**

எழுத்தாளராக அண்ணா,

தமிழும் அண்ணாவும்,

பேரறிஞர் அண்ணாவும் தமிழக மறுமலர்ச்சியும்,

அண்ணாவின் மேடைத்தமிழ்.

**பெரியார் பிறந்த நாள் விழா பேச்சுப்போட்டிக்கான தலைப்பு.**

தன்மானப் பேரொளி,

தெற்காசியாவின் சாக்ரடீஸ்,

சமுதாய விஞ்ஞானி பெரியார்,

தொண்டு செய்த பழுத்த பழம்.

# பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு பேச்சுப் போட்டி

தேதி: 29.9.2025

கிருஷ்ணகிரி, செப். 29: அண்ணா, பெரியார் பிறந்தநாள் விழாவையொட்டி, பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டியில் பங்கேற்க மாவட்ட நிர்வாகம் அழைப்பு விடுத்துள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ச.தினேஷ்குமார் திங்கள் கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அண்ணா, பெரியார் ஆகியோரின் பிறந்தநாளையொட்டி, பேச்சுப் போட்டிகள் அக்டோபர் 7, 8 ஆகிய தேதிகளில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலைக் கல்லூரியில் நடைபெற உள்ளது.

அண்ணா பிறந்தநாள் பேச்சுப் போட்டி பள்ளி மாணவர்களுக்கு வாய்மையே வெல்லும், ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம், காஞ்சித் தலைவன், அண்ணாவின் தமிழ் வளம் என்ற தலைப்பிலும், கல்லூரி மாணவர்களுக்கு எழுத்தாளராக அண்ணா, தமிழும் அண்ணாவும், பேரறிஞர் அண்ணாவும் தமிழக மறுமலர்ச்சியும், அண்ணாவின் மேடைத்தமிழ் ஆகிய தலைப்புகளில் நடைபெறுகிறது.

பெரியாரின் பிறந்தநாள் பேச்சுப் போட்டி பள்ளி மாணவர்களுக்கு, தந்தை பெரியாரின் சமூகநீதி சிந்தனைகள், பெரியாரும் பெண் விடுதலையும், வைக்கம் வீரர், சுயமரியாதை இயக்கம், கல்லூரி மாணவர்களுக்கு, தன்மானப் பேரொளி, தெற்காசியாவின் சாக்ரடீஸ், சமுதாய விஞ்ஞானி பெரியார், தொண்டு செய்து பழுத்த பழம் ஆகிய தலைப்புகளில் நடைபெற உள்ளது.

பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியில், முதல் பரிசு ரூ. 5,000 இரண்டாம் பரிசு ரூ. 3,000, மூன்றாம் பரிசு ரூ. 2,000 மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும்.

மேலும், அரசுப் பள்ளி மாணவர்கள் இருவருக்கு சிறப்பு பரிசுத் தொகை ரூ. 2,000 வழங்கப்படும். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கல்லூரி மாணவ, மாணவிகள் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் வாயிலாக அனுப்பியுள்ள படிவத்தில் அந்தந்த கல்லூரி முதல்வரிடமும், பள்ளி மாணவ, மாணவிகள், முதன்மைக் கல்வி அலுவலர் வாயிலாக அனுப்பியுள்ள படிவத்தில் அந்தந்த பள்ளி தலைமை ஆசிரியரிடமும் அனுமதி பெற்று பங்கேற்கலாம் என தெரிவித்துள்ளார்.